**<u>நீதித்துறை நடுவர் எண்.1நீதிமன்றம், இராமநாதபுரம்</u>**

**முன்னிலை : திரு. N.நிலவேஸ்வரன் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, இராமநாதபுரம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**<u>CIS. Crl.M.P.No.155/2026</u>**

**<u>CNR No. TNRM 02- 000371-2026</u>**

நவீன்குமார், வயது 31
த/பெ. மோகன்,
ஆசாரி தெரு,
தேவிப்பட்டிணம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

. . . மனுதாரர் /வாகனத்தின் உரிமையாளர்

-- எதிராக --

1. அரசுக்காக காவல் ஆய்வாளர் அவர்கள்,
   தேவிப்பட்டிணம் காவல் நிலையம்,
   இராமநாதபுரம்
   குற்ற எண்.08/2026

2. மேலாளர்,
   பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்,
   2/1- அய்யாசாமி கிளப்,
   வடக்கு தெரு,
   SVM பெட்ரோல் பல்க் அருகில்,
   வசந்தா நகர்,
   இராமநாதபுரம்.

. . . எதிர்மனுதாரர்கள் / அரசு
குற்றமுறையிடுபவர்

மனுதார்/வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் BNSS பிரிவு 497 மற்றும் 503-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு 05.02.2026-ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.S.செல்லமணி அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/அரசு குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், 2ஆம் எதிர்மனுதாரருக்கு இம்மனு குறித்து முறையான அறிவிப்பு அனுப்பபட்ட பிறகும் அவர் தரப்பில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ எத்தகைய எடுத்துரைப்பும் செய்யாத நிலையிலும் மேற்படி, இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . .

**உ த் த ர வு**

இம்மனுவானது தேவிப்பட்டிணம் காவல் நிலைய குற்ற எண். 08/2026–ல், சட்டப்பிரிவு 303 (2) BNS ன் கீழான வழக்கில், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தாக TN 65 AS 4045 என்ற பதிவெண் கொண்ட மூன்று சக்கர வாகனம் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற பொறுப்பில் ஒப்படைக்காமல் இருந்து வருகிறது என்றும், மேற்படி வாகனத்தை ஒப்படைத்து, இடைக்கால பொறுப்பில் வழங்ககோரி இம்மனு மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் / வாகனத்தின் உரிமையாளர் தரப்பு மனு மற்றும் வாதம் :–**

மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவிலும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதத்திலும் TN 65 AS 4045 என்ற பதிவெண் கொண்ட மூன்று சக்கர வாகனம் மனுதாரருக்கு சொந்தமானது ஆகும். தான் இந்த மனுவில் மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் ஆவேன் என்றும், மேற்படி வழக்கில் தனக்கு சொந்தமான TN 65 AS 4045 என்ற பதிவெண் கொண்ட BAJAJ MAXIMA CNG வாகனமானது கடந்த 20.01.2026 அன்று புகார்தாரரின் ஆட்டை தனது அண்ணன் மற்றும் இந்த வழக்கின் முதலாவது எதிரி சேர்ந்து திருடியதாக புகார் கொடுக்கப்பட்டு ஷை புகாரின் அடிப்படையில் வாகனமானது வழக்கில் சேர்க்கப்பட்டு குற்றமுறையிடுவோர் காவல் நிலையத்தில் மூன்று சக்கர வாகனம் கடந்த 20.01.2026 அன்று குற்றமுறையிடுவோரால் கைப்பற்றப்பட்டு காவல் நிலைய பொறுப்பில் இருந்து வருகிறது என்றும், ஷை வாகனமானது தனக்கு சொந்தமானதாகும் என்றும், மேற்படி தனது வாகனமானது உரிய பராமரிப்பின்றி வெயிலிலும் மழையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் தன் வாகனம் பாதிக்கப்பட்டு பயன்படுத்த இயலாத நிலைக்கு செல்ல வாய்ப்பு ஏற்பட்டு விடும், ஷை வாகனம் தன் அன்றாட பயன்பாட்டிற்கு

அவசியமாக தேவைப்படுகிறது என்றும், மேற்படி வாகனம் இல்லாவிட்டால் தன் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும், தனது குடும்பம் மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறோம் என்றும், மேற்படி வாகனம் குற்றமுறையிடுவோரால் கைப்பற்றப்பட்டு இன்றைய தேதிவரை சமூகம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றும், மேற்படி தன் வாகனம் நீதிமன்றத்தில் குற்றமுறையிடுவோரால் ஒப்படைக்கப்பட்ட பிறகு தன்னிடம் இடைக்கால பராமரிப்பில் தன் வசம் ஒப்படைக்க உத்தரவிடும் பட்சத்தில் தான் அதை நல்ல முறையில் பராமரித்து பாதுகாத்து வருவேன் என்றும், சமூகம் நீதிமன்றம் கோரும்போது தவறாமல் ஆஜர் செய்வேன் என்று உறுதி கூறுவதாகவும், மேற்படி வாகனத்தின் அசல் ஆர்.சி.புக் பஜாஜ் பைனான்ஸ் லிட் நிறுவனத்தில் இருந்து வருகிறது என்றும், மேற்படி நிறுவனத்தை இந்த மனுவில் எதிர்மனுதாரராக சேர்த்துள்ளேன் என்றும், மேற்படி தனது வாகனத்தை இடைக்காலமாக தன் வசம் ஒப்படைப்பதில் குற்றமுறையிடுவோருக்கோ மற்றும் 2 வது எதிர்மனுதாரருக்கோ எவ்வித ஆட்சேபனையும் இருக்க கூடியதில்லை என்றும், எனவே மேற்படி வழக்குச்சொத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து பின்பு மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

**<u>1 ஆம் எதிர்மனுதாரர்/அரசுத்தரப்பு பதிலுரையின் சுருக்கம் மற்றும் வாதம்:–</u>**

இந்த மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் பேரில் எதிர்மனுதாரர்/அரசுத்தரப்பில் அறிவிப்பு கோரப்பட்டது. அந்த பதிலுரையில் மேற்படி வழக்கின் சொத்தை மனுதாரரிடம் ஒப்படைத்தால் மனுதாரர் அதனை நீதிமன்ற விசாரணையின் போது ஆஜர்படுத்தமாட்டார் என்பதால் மீண்டும் இதுபோன்ற குற்ற செயல்களுக்கு வாகனத்தை பயன்படுத்தக்கூடும் என்பதால் மார்ஜினில் கண்ட வழக்கு சொத்தை அதன் உரிமையாளரான மனுதாரரிடம் வழங்க ஆட்சேபனை அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>2 ம் எதிர்மனுதாரரின் பதிலுரை மற்றும் வாதம் :</u>**

2 ஆம் எதிர்மனுதாரருக்கு இம்மனு குறித்து முறையான அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகும் அவர் தரப்பில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ எத்தகைய எடுத்துரைப்பும் எடுத்துரைக்கவில்லை.

**<u>தீர்வு :–</u>**

இம்மனுவில் மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் வாதம் கேட்கப்பட்டது. வழக்குக்கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் எத்தகைய பதிலுரையும் வாதமும் எடுத்துரைக்கவில்லை. எனவே 2ம் எதிர்மனுதாரரின் தரப்பில் ஆட்சேபனை இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆர்.சி.புத்தக நகலினை பரிசீலனை செய்யும்போது அதில் வழக்குச்சொத்தான TN 65 AS 4045 என்ற பதிவெண் கொண்ட மூன்று சக்கர வாகனத்தின் உரிமையாளர் மனுதாரர்தான் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் மனுதாரரின் ஆர்.சி.புத்தக அசலானது 2ம் எதிர்மனுதாரரிடம் உள்ளது என எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது குறித்து 2ம் எதிர்மனுதாரருக்கு முறையான அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகும் அதனை பெற்றுக்கொண்டு அவர் நேரிலோ வழக்கறிஞர் மூலமோ எத்தகைய எடுத்துரைப்பும் செய்யப்படவில்லை. எனவே 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இதை மறுத்து அதாவது, மனுதாரரின் உரிமைத்தன்மை பற்றி ஆட்சேபித்து எத்தகைய பதிலுரையும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்காத நிலையினை கருத்தில் கொண்டும், வழக்குச்சொத்தான வாகனத்தின் உரிமையாளர் இம்மனுதாரர் தான் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்விதம், வழக்குச் சொத்தான வாகனமானது மனுதாரருக்கு சொந்தமானது என்பதை அறிய முடிகிறது.

மேலும் மேற்படி வழக்குச்சொத்தானது பயன்படுத்தாமல் வைத்திருப்பதால் இயற்கை சீற்றங்களால் அதன் பாகங்கள் துருப்பிடித்து செயலிலக்கக்கூடும் என்பதாலும், வாகனத்தின் மதிப்பு குறைவதற்கு வாய்ப்புள்ளது என்பதாலும், மேற்படி வழக்குச்சொத்தை அதன் உரிமையாளர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே, மேற்காணும் பரிசீலனைகளின் அடிப்படையில் மனுதாரர் வசம் வழக்குச்சொத்தை பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது

<u>நிபந்தனைகள்</u>

1. காவல் துறையினர் மேற்படி வழக்குச்சொத்தான TN 65 AS 4045 என்ற பதிவெண் கொண்ட மூன்று சக்கர வாகனம் இந்நீதிமன்றத்தில் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. மனுதாரர் ரூ. 2,50,000/க்கு பிணைப்பத்திரம் எழுதித்தரவேண்டும்.

3. மேலும், மனுதாரர் தனக்காக இரு நபரும், தலா ரூ.10,000/- பிணை ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

4. மேலும், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மேற்படி வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தினை 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றவுடன் அதன் நகலினை இந்நீதிமன்றத்தில் உடனடியாக ஒப்படைக்க வேண்டும். தற்போது இதுகுறித்த நிரூபண அபிடவிட் தாக்கல் செய்ய வேண்டும்.

5. மேற்படி வழக்குச்சொத்தானது நான்கு பக்கமும், நன்கு தெரியும் வகையில் அதனுடைய போட்டோ, குறுந்தட்டு மற்றும் பஞ்சநாமா தாக்கல் செய்ய வேண்டும்.

6. மேற்படி வழக்குச்சொத்தை உருமாற்றமோ, விற்பனையோ செய்யக்கூடாது.

7. காவல்துறையினர் புலன் விசாரணைக்கு கோரும் போது, மேற்படி விசாரணைக்கு ஒப்படைத்து ஒத்துழைப்பு தர வேண்டும்.

8. நீதிமன்றம் கோரும்போது மேற்படி வழக்குச்சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவேண்டும்.

இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06 -ஆம் நாள் இவ்வுத்தரவு என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

N NILAVESHWARAN

Digitally signed by N NILAVESHWARAN
Date: 2026.03.06 14:39:26 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.